டங்களில் நடத்தப்படவில்லை. விரைவில் அதற்கான ஏற்பாடு செய்யப்படுமா? குறிப்பாக, நீலகிரி மாவட்டத்தில் நூற்றாண்டு விழா நடக்கவில்லை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முறையாக, முடிந்த அளவு மாவட்டங்களிலே நடத்தப்படும்.

Sub-Court at Tiruvellore

* Q. No. 739—Thiru N. KITTAPPA ; Will the Hon. the Minister for Law be pleased to state ;

(a) whether any representation for the location of a Sub Court at Tiruvellore ; has been made to the Government by the local sociation about 24th May 1978 ; and

(b) if so, the action taken thereon?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) திருவள்ளூரிலே ஒரு துணை நீதி மன்றம் ஏற்படுத்த உயர் நீதி மன்றம் சிபாரிசு செய்துள்ளது, அதனுடைய முன்னுரிமைப் பட்டியலிலே உள்ளது. நிதிநிலைமையைப் பொறுத்து, 1979–80 ஆம் ஆண்டிலே துவக்க இந்த அரசு உத்தேசித்துள்ளது.

திரு. கே. ஜே. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம் போளூரில் முன்சிப் சப்கோர்ட் ஏற்படுத்த அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா? அது எந்த நிலையில் உள்ளது என்பதை அறிவிப்பார்களா?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, அரசினுடைய பரிசீலனையில் உள்ளது.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவை ஒட்டி சிறைக் கைதிகள் விடுதலை.

*வினா எண். 740—திரு. கே. பண்ணை சேதுராம்.

திரு. மு. அம்பிகாபதி,

திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி சிறையில் இருக்கும் அரசியல் மற்றும் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்ற கைதிகளை விடுதலை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1979 ஏப்ரல் 19]

திரு எம். ஏ. ஜெயவேலு : (அமைச்சரின் பேரவை செயலர்): அரசு அதைப் பற்றி பரிசீலனை செய்தது. எந்த, எந்த வழியிலே, அதனுடைய தரத்தைப் பார்த்து, தண்டனையைக் குறைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

திரு கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற நாம் பெரியாருடைய தத்துவங்களுக்கு விரோதமாக, சிலர் குற்றங்களைத் செய்து உள்ளே போயிருக்கலாம். குறிப்பாக, தீண்டாமைக் குற்றங்கள், இது போன்ற குற்றங்களுக்கெல்லாம் நாம் விடுதலை செய்யவேண்டுமென்று நான் அரசை விரும்பிக் கேட்கவில்லை. இருந்தாலும், சிறுசிறு குற்றங்கள், திருட்டுக் குற்றம் போன்ற குற்றங்களுக்கும், அரசியல் காரணங்களுக்காகவும் உள்ளே சென்றவர்களையெல்லாம் பெரியார் நூற்றாண்டு விழாவிலே விடுதலை செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு : (அமைச்சரின் பேரவை செயலர்) : இதைத்தான் அரசு பரிசீலனை செய்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல், அந்த எண்ணத்தை ஏற்று அரசுபரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, தந்தை பெரியாருடைய நூற்றாண்டு விழாவையொட்டி, இந்த ஆண்டில் மரண தண்டனை பெற்றிருக்கிற கைதிகளின் மரண தண்டனையைத் தள்ளுபடி செய்து, ஆயுள் தண்டனையாக மாற்ற ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு : (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவரவர்களே, இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன.

தஞ்சையிலுள்ள இராசராசச் சோழன் சிலை.

*வினா எண். 741—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தஞ்சை நகரில நிறுவப்பட்டுள்ள இராசராசச் சோழன் உருவச் சிலையை கோயிலுக்குள் வைக்க நடவடிக்கை எடுக்கக் கோரி அரசுக்கு பொது மக்களிடமிருந்து இது பற்றி வேண்டுகோள் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :—இல்லை. பொது மக்களிடமிருந்து இது பற்றி வேண்டுகோள் ஏதும் இத்துறைக்கு வரவில்லை.